# FIRST INFORMATION REPORT

முதல் தகவல் அறிக்கை

(Under Section 154 Cr.P.C.)

(கு.ந.வி.தொ.பிரிவு 154 இன் கீழ்)

TAMIL NADU POLICE
INTEGRATED INVESTIGATION FORM-I

C 8101996

1. District : மாவட்டம் Ranipet | PS: காவல்நிலையம் V&AC | Year: ஆண்டு 2024 | FIR No.: மு.த.அ. எண் 02/24 | Date: நாள் 11-6-24

2. (i) Act சட்டம்: Prevention of Corruption Act-1988 as amended PC (Amendment) Act- | Sections பிரிவுகள்: Sec 7
   (ii) Act சட்டம்: | Sections பிரிவுகள்:
   (iii) Act சட்டம்: Cr PC | Sections பிரிவுகள்: 102 Cr PC
   (iv) Other Acts & Sections பிற சட்டங்களும், பிரிவுகளும் :

3. (a) Occurrence of Offence Day : குற்ற நிகழ்வு நாள் | Date from : நாள் முதல் 10/6/24 | Date to : நாள் வரை —
   Time Period : நேர அளவு | Time from : நேரம் முதல் — | Time to : நேரம் வரை —
   (b) Information Received at PS. Date : காவல் நிலையத்திற்கு தகவல் கிடைத்த நாள் 10-6-24 | Time நேரம் : 16.00 hrs
   (c) General Diary Reference : Entry No(s) பொது நாட்குறிப்பில் பதிவு விவரம் எண் Vol-II | Time நேரம் : 10.6.24 at 1600 hrs
   11.6.24 at 12.30 hrs.

4. Type of Information : Written/ Oral : தகவலின் வகை : எழுத்து மூலம் / வாய் மொழியாக Written

5. Place of Occurrence (a) Direction and Distance from PS: North East 60 kms.
   குற்ற நிகழ்விடம் (அ) காவல்நிலையத்திலிருந்து எவ்வளவு தூரமும், எத்திசையும்
   Beat Number : முறைக் காவல் எண் — | (b) Address : முகவரி Arakkonam Sub Registry Gandhi Road, Arakkonam, Ranipet Dt
   (c) In case outside limit of this Police Station, then the Name of P.S : | District :
   இக்காவல் நிலைய எல்லைக்கப்பால் நடந்து இருக்குமாயின், அந்நிலையில் அந்த கா.நி.பெயர் | மாவட்டம்

6. Complainant /Informant (a) Name : குற்றமுறையீட்டாளர்/ தகவல் தந்தவர் பெயர் V. Booma | (b) Father's/ Husband's Name : தந்தை / கணவர் பெயர் Vaikuntam
   (c) Date / Year of Birth : நாள் / பிறந்த ஆண்டு 4.6.72 | (d) Nationality : நாட்டினம் Indian | (e) Passport No. : வெளிநாட்டு கடவுச்சீட்டு எண் —
   Date of Issue : வழங்கப்பட்ட நாள் — | Place of Issue : வழங்கப்பட்ட இடம் —
   (f) Occupation : தொழில் Dy. Inspection Cell officer | (g) Address : முகவரி District Inspection Cell office Collectorate Campus, Vellore.

7. Details of Known/Suspected/Unknown accused with full particulars. (Attach separate sheet if necessary)
   தெரிந்த / ஐயப்பாட்டிற்குரிய / தெரியாத குற்றஞ்சாட்டப்பட்டவரின் முழுமையான விவரங்கள் (தேவையெனில் தனித்தாள் இணைக்கவும்)
   Tr.L.Vincent Joseph (49/24), S/o Lourd Samy, Assistant, I/c Sub Registrar, Arakkonam Subregistry, Ranipet District

8. Reasons for delay in reporting by the complainant / Informant :
   குற்றமுறையீட்டாளரால் / தகவல் கொடுப்பவரால் முறையிட்டதில் தகவல் கொடுப்பதில் தாமதம்
   — No Delay —

9. Particulars of properties stolen / involved (Attach separate sheet if necessary)
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் விவரம் (தேவையெனில் தனித் தாளில் இணைக்கவும்)

—

10. Total value of properties stolen / involved :
களவாடப்பட்ட / களவிற்குள்ளான சொத்துக்களின் மொத்த மதிப்பு —

11. Inquest Report / Un-natural death Case No. if any:
பிண விசாரணை அறிக்கை / இயற்கைக்கு மாறான இறப்பு எண் ஏதேனும் இருந்தால் —

12. FIR Contents (Attach separate sheet, if required) :
முதல் தகவல் அறிக்கையின் சுருக்கம். (தேவையெனில் தனித்தாளில் இணைக்கவும்)

Seperate sheet attached

13. Action taken : Since the above report reveals commission of offence(s) u/s as mentioned at item No.2 registered the case and took up the investigation / directed ...................... Rank ...................... to take up the investigation / Refused investigation / transferred to PS..............................................on point of jurisdiction.

எடுக்கப்பட்ட நடவடிக்கை : மேலே குற்ற முறையீட்டில் உள்ளவை பிரிவு 2ல் கூறப்பட்ட சட்ட பிரிவுப்படியான குற்றமாக வழக்கு பதிவு செய்து புலனாய்வுக்கு எடுத்துக்கொள்ளப்பட்டது / பணிக்கப்படுதல் .............................. பதவி ...................... நிலை பணியாளரின் புலனாய்வுக்கு எடுத்துகொள்ள பணிக்கப்பட்டது / மறுக்கப்பட்டு எல்லையைக் கருதி புலனாய்வுக்கு .............................................. காவல் நிலையத்திற்கு மாற்றப்படுகிறது.

FIR read over to the Complainant / Informant, admitted to be correctly recorded and a copy given to the Complainant / Informant free of cost.
முதஅ. குற்றமுறையீட்டாளருக்கு / தகவல் தந்தவருக்கு படித்துக்காட்டி, அது சரியாக எழுதப்பட்டு இருப்பதாக ஏற்றுக் கொள்ளப்பட்டு, அதன் படி நகல் ஒன்று இலவசமாக கொடுக்கப்பட்டது.

14. Signature / Thumb Impression of the Complainant / Informant
குற்றமுறையீட்டாளர் / தகவல் கொடுப்பவரின் ஒப்பம் / பெருவிரல் இரேகைப் பதிவு
(signature) 11/6/24

Signature of the Officer in-charge, Police Station
காவல் நிலைய பொறுப்பு அலுவலரின் ஒப்பம்
(signature) 11/6/2024

15. Date & Time of despatch to the court:
நீதிமன்றத்திற்கு அனுப்பப்பட்ட நாளும், நேரமும்
11-6.24 at 1630hrs.

Name: பெயர் V. Ganesan
Rank: நிலை Dy. Supdt. of Police
VEAC, Ranipet.

<u>பணிந்து சமர்ப்பிக்கப்படுகிறது:</u> இன்று 11.06.2024 ஆம் தேதியன்று பகல் சுமார் 12.30 மணியளவில் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு அலுவலகத்தில் துணை காவல் கண்காணிப்பாளர் V.கணேசன் ஆகிய நான் ஆஜரில் இருந்தபோது, திருமதி. V.பூமா, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இருப்பு), வேலூர்-9 அவர்கள் அலுவகத்தில் ஆஜராகி கொடுத்த புகார் மனுவின் விவரம் பின்வருமாறு, இராணிப்பேட்டை 11.06.2024 அனுப்புநர் V.பூமா, துணை ஆய்வுக்குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக்குழு அலுவலகம், வேலூர், இராணிப்பேட்டை, திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்டங்கள், மாவட்ட ஆட்சியர் அலுவலகம் (இருப்பு), வேலூர்-9. பெறுநர் துணை காவல் கண்காணிப்பாளர் அவர்கள், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை. <u>ந.க.எண்.S2/168/2024, நாள்: 11.06.2024</u> அய்யா, பொருள்: இருதுறை திடீர் கூட்டு சோதனை – அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகம் - இருதுறை திடீர் கூட்டு சோதனை – நடவடிக்கை எடுத்தல் வேண்டி – மனு. பார்வை: அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் மேற்கொள்ளப்பட்ட இருதுறை திடீர் சோதனை செயல்முறை, நாள்:10.06.2024. கடந்த 10.06.2024 ஆம் தேதி பகல் சுமார் 14.00 மணிக்கு, இராணிப்பேட்டை மாவட்டம், அரக்கோணம் காந்தி சாலையில் அமைந்துள்ள பதிவுத்துறை சார்பதிவாளர் அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள சார்பதிவாளர் அலுவலகத்தில் பத்திரம், பிற பதிவுகள் மற்றும் சான்றிதழ்கள் பெற வரும் பொதுமக்களிடம் அவர்களுக்கு செய்ய வேண்டிய வேலைகளுக்காக சார்பதிவாளர் மற்றும் அலுவலக பணியாளர்கள் தனித்தனியாக பதிவு செய்யப்படும் பத்திர மதிப்புகளுக்கு ஏற்பவும், அவரவர் செய்து முடிக்க வேண்டிய பணிகளுக்காக நேரடியாகவும், ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் (புரோக்கர்கள்) மூலமாக கையூட்டு பெறுவதாகவும், இடைத்தரகர்கள், ஆவண எழுத்தர்கள் மற்றும் ஆவண விற்பனையாளர்கள் அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் ஆதிக்கம் செலுத்துவதாக எனக்கு கிடைத்த நம்பகமான தகவலை, நான் எனது

தகவலர்கள் மூலம் ஊர்ஜிதம் செய்து கொண்டு, இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் அவர்களுக்கு சுமார் 16.00 மணிக்கு தகவல் தெரிவித்து, என்னுடைய தலைமையில், மாலை சுமார் 17.00 மணிக்கு துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் மற்றும் இராணிப்பேட்டை ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு குழுவினருடன் அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இரு துறை திடீர் சோதனை மேற்கொள்ள மாலை சுமார் 18.45 மணிக்கு சென்று சேரப்பட்டது. அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தின் தரைத்தளத்தில் உள்ள அலுவலகத்தை குழுவினருடன் கண்காணித்துக்கொண்டிருந்தபோது, நிறைய பொது மக்கள் சார்பதிவாளர் அலுவலகத்திற்குள்ளாகவும், அலுவலக வளாகத்திற்குள்ளேயும் காத்திருந்தனர். சார்பதிவாளர் அவர்கள் அவரது இருக்கையில் உட்கார்ந்து அலுவலக பணியை மேற்கொண்டிருந்தார். பின்னர், மாலை சுமார் 18.55 மணிக்கு, இரு துறை திடீர் சோதனைக்குழுவினராகிய நாங்கள், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் உள்ளே சென்று, சார்பதிவாளர் இருக்கையில் உட்கார்ந்திருந்த சார்பதிவாளர் அவர்களிடமும், அங்கிருந்த அலுவலர்களிடமும் துணை ஆய்வுக்குழு அலுவலர் அவர்கள், என்னையும், குழுவினரையும் அறிமுகப்படுத்திக்கொண்டு, வந்த நோக்கத்தை தெரிவித்து, சோதனைக்கு வந்த அலுவலர்களாகிய நாங்கள் எங்களை சுயபரிசோதனைக்கு உட்படுத்தி கொண்டு எங்களிடம் எந்த பணமும் இல்லை என்று அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலக ஊழியர்களுக்கு உறுதி செய்து காண்பிக்கப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் திரு.வின்சென்ட் ஜோசப் அவர்களை சோதனை செய்ய, அவரிடம் அவருடைய மணி பர்ஸில் பணம் ரூ.1,400/- இருந்தது. அவரிடம் அந்த சார் பதிவாளர் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் இன்று அலுவலகத்திற்குள்ளே வந்தபோது பதிவு செய்துள்ளீர்களா என கேட்க, அவர் தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருப்பதாக கூறி, தனி நபர் கையிருப்பு பதிவேட்டை ஆஜர் செய்தார். அந்த தனி நபர் கையிருப்பு பதிவேடு விசாரணைக்காக கைப்பற்றப்பட்டது. மேலும், சார்பதிவாளர் இருக்கையின் மேஜை இழுவறைகள் மற்றும் அருகில் இருந்த ரேக்குகளை சோதனை செய்ய அதில் பணம் ஏதும் இல்லை. பின்னர்,

சார்பதிவாளர் இருக்கைக்கு அருகில் உள்ள இளநிலை உதவியாளர் இருக்கையில் இருந்த திரு.சீனிவாசன், இளநிலை உதவியாளர் அவர்களை சோதனை செய்ததில், அவரிடம் பணம் ரு.200/- இருந்தது. அவரை விசாரிக்க, தான் 10.06.2024 ஆம் தேதி காலை அலுவலகத்திற்கு வரும்போது பணம் ரு.800/- எடுத்து வந்ததாகவும், அதில் ரு.600/-க்கு ப்ளு டுத் ஹெட் செட் வாங்கிவிட்டதாகவும், மீதம் உள்ள ரு.200/- ட்ரெயின் டிக்கெட் எடுக்க வைத்திருக்கும் பணம் என்று கூறியதாலும், மேற்படி சார்பதிவாளர் திரு.வின்சென்ட் ஜோசப் மற்றும் இளநிலை உதவியாளர் திரு.சீனிவாசன் ஆகியோர் 10.06.2024 ஆம் தேதியன்று தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் தாங்கள் வீட்டில் இருந்து அலுவலகத்திற்கு வரும்போது எடுத்து வந்த பணம் பற்றிய விவரங்களை தனி நபர் கையிருப்பு பதிவேட்டில் பதிவு செய்திருந்ததால், அவர்களிடமே அவர்களுடைய பணம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. பின்னர் சார் பதிவாளர் அலுவலக ஹாலில் தனியாக இருந்த இருக்கையை பற்றி திரு.வின்சென்ட் ஜோசப் அவர்களிடம் விசாரிக்க, அலுவலக உதவியாளர் திருமதி.மலர் என்பவர்தான் செய்து வந்ததாகவும், இன்று மாலை அவர் அவசர வேலை இருப்பதாக அனுமதி கேட்டதாகவும், சிறிது நேரத்திற்கு முன்புதான் தன்னிடம் அனுமதி பெற்று வீட்டிற்கு சென்றுவிட்டார் என்றும் தெரிவித்தார். அந்த இருக்கை அருகில் உள்ள கப்போர்ட் ஆகியவற்றை சோதனை செய்ய, பணம் ஏதும் இல்லை. பின்னர், சார்பதிவாளர் ஹாலுக்கு அருகில் கண்ணாடி தடுப்புகளால் ஆன அறையை சோதனை செய்ய, அதில் மொத்தம் ஏழு கணினிகளும், இரண்டு ஜெராக்ஸ் மிஷின்களும் இருந்தன. அந்த இருக்கைகளில் உட்கார்ந்திருந்த அலுவலர்களின் பெயர் மற்றும் விவரங்கள் குறித்துக்கொள்ளப்பட்டு, அந்த கணினி ஹாலில், நீதிமன்றம் சம்மந்தமான கோப்புகள் வைக்கப்பட்டிருந்த அறையின் வாசலுக்கு வலது புறத்தில் உள்ள இரண்டாவது கணினி மேஜைக்கு பின்புறம் சோதனை செய்ய, அங்கு பணம் கசக்கப்பட்டு மறைவாக வீசப்பட்டிருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரு.3,100/- இருந்தது. அந்த பணம் குறித்து அந்த அறையில் இருந்த அலுவலக பணியாளர்களிடம் விசாரிக்க, அந்த பணத்திற்கு யாரும் உரிமை கோரவில்லை. எனவே, அந்த பணம் ரு.3,100/- ஆனது உரிமை கோராத

பணமாக கைப்பற்றப்பட்டது. அந்த கணினி அறையில் இருந்த திரு.ரகுகுமார், TCS கேமிரா ஆபரேட்டர், சார்பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.140/-, திரு.T.தாமோதரன், உதவியாளர், சார்பதிவாளர் அலுவலகம், அரக்கோணம், இராணிப்பேட்டை பதிவு மாவட்டம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.500/-, திரு.M. கோட்டீஸ்வரன், Data Entry Operator, சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.40/-, திருமதி.K. பாரதி, Data Entry Operator, சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.50/-, திரு.S.குமார் (49/2024) த/பெ சுந்தரபாண்டியன், எண்.7A, அண்ணாநகர், சிப்காட், இராணிப்பேட்டை (அலுவலகத்தில் சீல் போடுவது, எண்டார்ஸ்மெண்ட் எழுதுவது போன்ற பணிகளை செய்யும் தனி நபர்) என்பவரை திரேக சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.120/- இருந்தன. மேற்படி சார் பதிவாளர் அலுவலக ஊழியர்கள் தாங்கள் வைத்திருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் கூறியதால், அவர்களிடமே அந்த பணம் திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திரு.G.வெங்கடேசன், எண்.5, போல் தெரு, பழனிப்பேட்டை, அரக்கோணம் (சார் பதிவாளர் அலுவலகத்தில் ஸ்கேன் செய்வதற்காக கிழிக்கப்பட்ட ஆவணங்களை தைப்பதை செய்யும் தனி நபர்) என்பவரை திரேக சோதனை செய்ததில், அவரிடம் பணம் ரு.4,900/- இருந்தது. அந்த பணத்திற்கு அவர் தக்க முகாந்திரம் சொல்லாததால் பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர், கணினி அறைக்கு பின்புறம் உள்ள அறையை சோதனை செய்ய, அந்த அறையில் யாரும் இல்லை. அந்த அறையை சார்பதிவாளர் திரு.வின்செண்ட் ஜோசப் அவர்கள் முன்னிலையில் சோதனை செய்ய, அந்த அறையில் வடக்கு திசை சுவற்றை ஒட்டியவாறு ஒரு பீரோ வைக்கப்பட்டிருந்தது. அதை சோதனை செய்ய, அது ஐந்து அறைகளை கொண்டதாகவும், அதில் மேலிருந்து இரண்டாவது மற்றும் முன்றாவது அறைகளை சிறிய சிறிய அறைகளாக தடுக்கப்பட்டிருந்தவற்றில் கணினி குறுந்தகடுகளும், முதல் அறையில் பேப்பர்களும், நான்காவது மற்றும் ஐந்தாவது அறைகளில் கட்டைப்பைகளும், சார்ஜர் ஒயர்களும், பயன்படுத்தப்படாத பொருட்களும்

இருந்தன. அந்த குறுந்தகடுகள் வைக்கப்பட்டுள்ள இரண்டாவது அறையை சோதனை செய்ய, அதில் பணம் கத்தையாக இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் ரூ.3,600/- இருந்தது. அந்த பணம் குறித்து அந்த அறையில் இருந்த அலுவலக பணியாளர்களிடம் விசாரிக்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோராததால், அந்த பணம் கைப்பற்றப்பட்டது. பின்னர், காத்திருப்போர் அறையில் உட்கார்ந்திருந்த நபர்களை விசாரித்தும், அவர்களை திரேக சோதனை செய்தும், பணம் வைத்திருந்த நபர்களின் விவரங்கள் மட்டும் குறித்துக்கொள்ளப்பட்டும், பணம் ஏதும் இல்லாதவர்களை விசாரித்தும் அனுப்பப்பட்டனர். மேலும், பணம் வைத்திருந்த நபர்கள், தங்கள் வசம் இருந்த பணத்திற்கு தக்க முகாந்திரம் மற்றும் உரிய விளக்கம் கூறியதால் அவர்கள் வசம் இருந்த தொகை அவர்களிடமே திருப்பி கொடுக்கப்பட்டது. மேலும், திரு.P.K.முருகேசன் த/பெ பழனி கன்னைய முதலியார், எண்.15, கீழாண்டை சந்து தெரு, குருவராஜப்பேட்டை, அரக்கோணம் தாலுக்கா (இடைத்தரகர்) என்பவரை சோதனை செய்ய, அவரது Underwear right side pocket-ல் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப் பார்க்க, அதில் பணம் ரூ.16,000/- இருந்தது. அந்த பணத்திற்கு மேற்படி திரு.P.K.முருகேசன் அவர்கள் தக்க முகாந்திரம் கூறாததால், அந்த பணம் ரூ.16,000/- கைப்பற்றப்பட்டது. திருமதி.ஸ்ரீவள்ளி, க/பெ கோவிந்தன், Block No.10, எண்.1086, முகப்பேர் கிழக்கு, சென்னை-37 என்பவரை சோதனை செய்ய, அவர் வைத்திருந்த கைப்பையில் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.5,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, திருமதி.ஸ்ரீவள்ளி அவர்களிடம் விசாரிக்க, அவர் அந்த பணத்தை ஆவண எழுத்தருக்காகவும், ரிஜிஸ்டர் ஆபீஸ் செலவிற்கான பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.5,000/- கைப்பற்றப்பட்டது. திரு.பட்டாபி, த/பெ ஆதிசேஷ நாயுடு, எண்.3/88, ஒத்தவாடைத்தெரு, எர்ரப்பநாயுடு கண்டிகை, திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவரது Shirt left side outer pocket-ல் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, மேற்படி திரு.பட்டாபி

என்பவரிடம் விசாரிக்க, அவர் அந்த பணத்தை ஆவண எழுத்தருக்காகவும், ரிஜிஸ்டர் ஆபீஸ் செலவிற்கான பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.I.K.பாபு, த/பெ குப்புசாமி, அமீர்பேட்டை கிராமம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவரது Pant right side pocket-ல் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து விசாரிக்க, அதில் ஆவண எழுத்தருக்கு ரிஜிஸ்டர் ஆபீஸ் செலவிற்கான பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.K.மணிகண்டன், த/பெ குசேல செட்டி, எண்.2/98, பஜனை கோவில் தெரு, கீழ் கேசவராஜப்பேட்டை, திருத்தணி தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவரது Shirt left side outer pocket-ல் பணம் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து, மேற்படி திரு.மணிகண்டன் என்பவரிடம் விசாரிக்க, அந்த பணத்தை ஆவண எழுத்தருக்காகவும், ரிஜிஸ்டர் ஆபீஸ் செலவிற்கான பணம் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. பின்னர், திருமதி.சத்யா, த/பெ தனஞ்செழியன், T.N.R.கண்டிகை, அரக்கோணம் தாலுக்கா, திருவள்ளூர் மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவருடைய Hand Bag-ல் பணம் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் பணம் ரூ.10,000/- இருந்தது. அந்த பணம் குறித்து விசாரிக்க, தான் ஒரு ஆவண எழுத்தருடைய தட்டச்சர் என்று சொன்னதால், அந்த பணம் ரூ.10,000/- கைப்பற்றப்பட்டது. மேலும், 1) திரு.P.கோவிந்தசாமி, த/பெ கோபால் நாயுடு, எண்.41-30-10, ஐஸ்பேக்டரி தெரு, விஜயவாடா, ஆந்திரா மாநிலம் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் ரூ.30,700/-ம், 2) திரு.மகேஷ்வரன், நெ.110 A, முனியப்பன் நகர், 3வது மெயின் ரோடு, நெற்குன்றம், சென்னை-92 என்பவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரூ.2,65,900/-ம், 3) திரு.குருசாமி, த/பெ நரசிம்மன், எண்.82, எடத்தெரு, அம்மவார்பேட்டை, அரக்கோணம், இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரூ.20,000/-ம், 4) திரு.S.ஜெய்சங்கர், த/பெ சுப்பிரமணி ரெட்டி, அம்மாவார் தாங்கல், கீழ்குப்பம் என்பவரை சோதனை செய்ய,

அவரிடம் பணம் ரு.4,000/-ம், 5) திரு.குமார், த/பெ ஏகாம்பரம், எண்.3/84, சின்னமாத்தூர், கருமாரியம்மன் கோயில் 2வது தெரு, சென்னை-68 என்பவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.22,000/-ம், 6) திரு.தோமாஸ், த/பெ மரியண்ணா, எண்.319, சகாயாமாதா தெரு, உரியூர் குப்பம், அரக்கோணம் தாலுக்கா, இராணிப்பேட்டை மாவட்டம் என்பவரை சோதனை செய்ய, அவரிடம் பணம் ரு.2,00,000/-ம், இருந்தது. அந்த பணம் குறித்து, மேற்படி நபர்கள் தக்க முகாந்திரம் கூறியதால், அவர்களிடமே திருப்பி தரப்பட்டது. பின்னர், சார் பதிவாளர் அலுவலக கட்டிடத்திற்கு கிழக்கு திசையில் உள்ள பெண்கள் கழிவறையை ஒட்டியுள்ள இரும்பு கதவிற்கு பின்புறம் சுவற்றை ஒட்டி இருந்த ஒரு கல்லிற்கு பின்புறம் சோதனை செய்ய, அங்கு கர்ச்சீப்பிற்குள் சுற்றப்பட்டு பணம் கத்தையாக இருந்தது, மேலும், அதனுடன் ஒரு ஆதார் கார்டும் இருந்தது. அந்த பணத்தை எடுத்து எண்ணிப்பார்க்க, அதில் ரு.47,230/- இருந்தது. அந்த ஆதார் கார்டை பார்க்க, அது முருகன் கோவிந்தன், பிறந்த நாள்:26/06/1967, 102, வாணியர் தெரு, வாணியம்பேட்டை, போளூர், வேலூர், தமிழ்நாடு 4688 6465 8614 என இருந்தது. மேற்படி பணம் பற்றி, அலுவலகத்திற்குள்ளிருந்த அலுவலக ஊழியர்கள் மற்றும் பொது மக்களிடம் கேட்க, யாரும் அந்த பணத்திற்கு உரிமை கோராததால், மேற்படி பணம் ரு.47,230/- கைப்பற்றப்பட்டது. மேற்படி ஆதார் கார்டும் கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.வின்சென்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களிடம் 1) அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலக அலுவலக ஊழியர்கள் வருகைப்பதிவேடு, 2) DATA ENTRY OPERATOR AND CAMERA OPERATOR ATTENDANCE REGISTER குறித்து கேட்க, அதை அவர் ஆஜர் செய்தார். அந்த பதிவேடுகளின் முதல் பக்கம் மற்றும் பதிவுகள் உள்ள இறுதி பக்கங்களில் நானும், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் மற்றும் திரு.வின்சென்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் ஆகியோர் கையொப்பம் செய்து கைப்பற்றப்பட்டது. பின்னர், திரு.வின்சென்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களிடம் அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலக அ-கணக்கு, H-கணக்கு, "D" கணக்கு பதிவேடு பற்றி கேட்க, அவர் கணினியில் இருந்து 10.06.2024 ஆம் தேதி இரவு 18.30 மணி வரை பதிவு செய்த ஆவணங்களின்

பதிவினை Star 2.0 என்ற மென்பொருளில் திரு.சீனிவாசன், இளநிலை உதவியாளர் என்பவர் மூலம் பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார். அதில், நானும், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன், இளநிலை உதவியாளர் திரு.சீனிவாசன் மற்றும் திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் கையொப்பம் செய்து, அந்த ஆவணங்கள் அனைத்தும் கைப்பற்றப்பட்டன. பின்னர், திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களிடம், படைவீரர் கொடிநாள் வசூல் தொகை குறித்து விசாரிக்க, கடந்த மார்ச்-2024 முதல் கொடிநாள் வசூல் நேரடியாக பெறப்படுவதில்லை எனவும், ஆன் லைன் மூலம் விருப்பப்பட்டவர்கள் நேரடியாக Armed Forces Flag Day-ற்கு நன்கொடையாக செலுத்தலாம் என்றும், இன்றைய நாள் ஒரு நபர் மட்டும் ரூ.100/- நேரடியாக கொடி நாள் தொகையாக செலுத்தியுள்ளார் எனவும், அதனுடைய Acknowledgement மூலம் திரு.சீனிவாசன், இளநிலை உதவியாளர் என்பவர் மூலம் பிரிண்ட் அவுட் எடுத்து ஆஜர் செய்தார். பின்னர், அந்த தாளில் திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களை சான்றொப்பம் செய்து தர சொல்லி கேட்டு பெற்று, அதில், நானும், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன், இளநிலை உதவியாளர் திரு.சீனிவாசன் மற்றும் திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் கையொப்பம் செய்து, அந்த தாள் கைப்பற்றப்பட்டது. மேலும், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலக நிரந்தர முன் பணம் ரூ.250/- இருப்பில் இருந்தது. அந்த நிரந்தர முன் பணம் பதிவேடு பற்றி திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களிடம் விசாரிக்க, அவர் அந்த பதிவேட்டை ஆஜர் செய்தார். அதை பார்வையிட, நிரந்தர முன் பணம் பதிவேடு தொகுதி எண்-2 ஆரம்பம் 31.3.2003 என இருந்தது. மேலும், அது பக்கம்-01 முதல் பக்கம்-194 வரை இருந்தது. அதில் 107 வது பக்கத்தில் அரக்கோணம் எண்.2 இணை சார் பதிவாளர் அலுவலகம் இயங்கி வந்தது வரை அதாவது டிசம்பர்-2020 30.11.20 முதல் 30.12.20 வரை இருப்பு ரூ.250/- என குறிப்பிடப்பட்டுள்ளது. அதற்கு பிறகு அந்த பதிவேட்டில் எந்த பதிவும் இல்லை. அதன் பிறகு நிரந்தர முன் பணம் பதிவேடு பராமரிக்கப்படுவதில்லை என தெரிவித்தார். அரக்கோணம் சார் பதிவாளர்

அலுவலக நிரந்தர முன் பணம் ரூ.250/- திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களிடம் திரும்ப ஒப்படைக்கப்பட்டது. மேலும், அந்த பதிவேட்டின் முதல் பக்கம் மற்றும் பதிவுகள் மேற்கொள்ளப்பட்டுள்ள பக்கம்-111 ஆகியவற்றில் நானும், துணை காவல் கண்காணிப்பாளர் திரு.V.கணேசன் மற்றும் திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு: சார்பதிவாளர் கையொப்பம் செய்து, அந்த நிரந்தர முன் பணம் பதிவேடு கைப்பற்றப்பட்டது. பின்னர், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலக வளாகத்திற்குள் நிறுத்தப்பட்டிருந்த திரு.வின்செண்ட் ஜோசப் அவர்களுடைய Hyundai i20 Sports bearing Regn.No.KA 03 NF 2037-யை திரு.வின்செண்ட் ஜோசப் அவர்களுடைய முன்னிலையில் சோதனை செய்ய, அந்த காரில் பணமோ, வேறு எந்த ஆவணங்களோ இல்லை. மேற்படி இரு துறை திடீர் சோதனையின்போது, உரிமை கோராத பணம் ரூ.53,930/- கைப்பற்றப்பட்டது குறித்தும், அரக்கோணம் சார் பதிவாளர் அலுவலகத்தில் ஆவண எழுத்தர்கள், ஆவண எழுத்தர்களின் உதவியாளர்கள், பொது மக்கள் பதிவு அலுவலகத்தில் செலவிற்காக இடைத்தரகர்களிடம் கொடுப்பதற்காக வைத்திருந்த பணம் ரூ.65,900/- கைப்பற்றப்பட்டது பற்றியும், இரண்டு தனிநபர்கள் அரசு அலுவலக பதிவேடுகளை கையாள்வது பற்றியும், இடைத்தரகர்கள் சார் பதிவாளர் அலுவலகத்தில் நடமாட்டம் அதிகமாக இருப்பது குறித்தும் திரு.வின்செண்ட் ஜோசப், பொறுப்பு:சார் பதிவாளர் அவர்களிடம் கேட்க, அவர் பதில் ஏதும் கூறாமல் மௌனமாக இருந்தார். மேற்படி இருதுறை கூட்டுச்சோதனையில், அரக்கோணம் சார்பதிவாளர் அலுவலகத்தில் இருந்த பெண் அலுவலர் மற்றும் பத்திரப்பதிவு அலுவலகத்திற்கு வந்திருந்த பெண்களையும் தனியறையில் வைத்து திருமதி.சௌபர்னிகா, உதவி ஆய்வாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை என்பவரால் சோதனை செய்யப்பட்டது. இந்த இருதுறை திடீர் சோதனையில், கைப்பற்றப்பட்ட தக்க முகாந்திரம் கூற இயலாத பணம் ரூ.65,900/- ஆனது திரு.வின்செண்ட் ஜோசப், உதவியாளர், பொறுப்பு: சார்பதிவாளர் அவர்களுக்கு லஞ்சமாக கொடுப்பதற்காக வைத்திருந்த பணமாக இருக்ககக்கூடும் என கருதி கைப்பற்றப்பட்டது. மேலும், உரிமை கோராத பணம் ரூ.53,930/-, ஆக மொத்தம் ரூ.1,19,830/- ஆனது இருதுறை திடீர்

கூட்டுச்சோதனையில் கைப்பற்றப்பட்டது. மேற்படி இருதுறை திடீர் கூட்டு சோதனையானது, 11.06.2024 ஆம் தேதி காலை சுமார் 02.30 மணிக்கு முடிக்கப்பட்டது. நிகழ்வுகள் அனைத்தும் இருதுறை திடீர் கூட்டுசோதனை செயல்முறை தயார் செய்து, நானும், திரு.V.கணேசன், துணை காவல் கண்காணிப்பாளர், ஊழல் தடுப்பு மற்றும் கண்காணிப்பு பிரிவு, இராணிப்பேட்டை மற்றும் திரு.வின்சென்ட் ஜோசப், உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர், சார் பதிவாளர் அலுவலகம், அரக்கோணம் ஆகியோரும் கையொப்பம் செய்தோம். அதன் நகல் திரு.வின்சென்ட் ஜோசப், உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர் என்பவருக்கு வழங்கி, ஒப்புதல் பெறப்பட்டது. திரு.வின்சென்ட் ஜோசப், உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர் என்பவர் தனது பதவியை அதிகார துஷ்பிரயோகம் செய்து, ஆவண எழுத்தர்கள் மற்றும் இடைத்தரகர்கள் மூலம் பொது மக்களிடமிருந்து லஞ்சமாக பணத்தை கேட்டு பெறும் திரு.வின்சென்ட் ஜோசப், உதவியாளர், பொறுப்பு: சார் பதிவாளர் என்பவர் மீது ஊழல் தடுப்பு சட்டப்படி நடவடிக்கை எடுக்கும்படி கேட்டுக்கொள்கிறேன். மேலும், இந்த திடீர் சோதனையின்போது கைப்பற்றப்பட்ட லஞ்சப்பணம் ரூ.1,19,830/-, கைப்பற்றப்பட்ட பதிவேடுகள், ஆவணங்கள் மற்றும் இருதுறை திடீர் கூட்டுசோதனையின்போது தயார் செய்யப்பட்ட அசல் செயல்முறை ஆகியவற்றை தங்களிடம் மேல் நடவடிக்கை எடுக்கும்பொருட்டு சமர்ப்பிக்கிறேன். ஒம்/xxxxx (வை.பூமா), துணை ஆய்வுக் குழு அலுவலர், மாவட்ட ஆய்வுக் குழு அலுவலகம், வேலூர்-9.

Sir, Received the complaint on 11.06.2024 at 12.30 hrs and registered a case in Ranipet V&AC Cr.No.02/2024 u/s 7 of Prevention of Corruption Act, 1988 as amended in PC (Amendment) Act, 2018 r/w 102 Cr.PC on 11.06.2024 at 15.00 hrs. Sd/- xxxxxxxx (V.Ganesan), 11/6/2024 Dy.Supdt.of Police, V&AC., Ranipet, Ranipet District.

The FIR in original along with the complaint and its enclosure sent to the Hon'ble CJM and Special Judge, Ranipet and other copies to the Officers concerned.

11/6/2024

Dy. Supdt. of Police
V & A.C., Ranipet,
Ranipet Dist.,